# மூன்றாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

## தமிழ்

மதிப்பெண்: 60

வகுப்பு - ஏழு - ____________ நேரம்: 2மணி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.** 10 × 1 = 10

1. இந்த வேலையை முடிக்க ஒரு கை குறைகிறது என்பது ____________
   அ) முதலாகு பெயர் ஆ) சினையாகு பெயர்
   இ) தொழிலாகு பெயர் ஈ) பண்பாகு பெயர்
2. இளமை என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ____________
   அ) முதுமை ஆ) புதுமை இ) தனிமை ஈ) இனிமை
3. காயிதே மில்லத் ____________ பண்பிற்கு உதாரணமாகத் திகழ்ந்தார்.
   அ) தண்மை ஆ) எளிமை இ) ஆடம்பரம் ஈ) பெருமை
4. ‘மாரி + ஒன்று’ என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ____________
   அ) மாரியொன்று ஆ) மாரிஒன்று இ) மாரியின்று ஈ) மாரியன்று
5. கூடு கட்டத் தெரியாத பறவை ____________
   அ) காக்கை ஆ) குயில்
   இ) சிட்டுக்குருவி ஈ) தூக்கணாங்குருவி
6. ____________ ஒரு நாட்டின் அரணன்று.
   அ) காடு ஆ) வயல் இ) மலை ஈ) தெளிந்த நீர்
7. சாந்த குணம் உடையவர்கள் ____________ முழுவதையும் பெற்றார்.
   அ) புத்தகம் ஆ) செல்வம் இ) உலகம் ஈ) துன்பம்
8. செல்வத்தின் பயன் ____________ வாழ்வு.
   அ) ஆடம்பர ஆ) நீண்ட இ) ஒப்புரவு ஈ) நோயற்ற
9. மக்கள் அனைவரும் ____________ ஒத்த இயல்புடையவர்கள்.
   அ) பிறப்பால் ஆ) நிறத்தால் இ) குணத்தால் ஈ) பணத்தால்
10. மனித வாழ்க்கையில் தேவைப்படுவது ____________
    அ) பணம் ஆ) புகழ் இ) பொறுமை ஈ) வீடு

**II. பொருத்துக.** 5 × 1 = 5

11. முதல் திருவந்தாதி - புரவலர்
12. இரண்டாம் திருவந்தாதி - முனைப்பாடியார்
13. அறநெறிச்சாரம் - பொய்கையாழ்வார்

14. பழமொழி - பூதத்தாழ்வார்

15. இரவலர் - முன்றுரை அரையனார்

**III. மனப்பாடப்பாடல்** **4 + 2 = 6**

16. 'அறம் என்னும் கதிர்' பாடலை அடிபிறழாமல் எழுதுக.

17. 'நாடு' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

**IV. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** **5 × 2 = 10**

18. ஒரு நாட்டுக்கு எவையெல்லாம் அரண்களாக அமையும்?

19. உழவர்கள் எப்போது நண்டு பிடித்தனர்?

20. இரட்டைக்கிளவி என்பது யாது? சான்று தருக.

21. தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?

22. காக்கை ஏன் குயில் குஞ்சைப் போகச் சொன்னது?

23. இந்த உலகம் யாருக்கு உரியது?

**V. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** **3 × 3 = 9**

24. சாந்தம் பற்றி இயேசுகாவியம் கூறுவன யாவை?

25. திருநெல்வேலியின் புவியியல் அமைப்புப் பற்றிக் கூறுக.

26. 'இரட்டைக்கிளவி' அடுக்குத்தொடர் - ஒப்பிடுக.

27. உழவுத்தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.

**VI. நெடுவினா.** **1 × 5 = 5**

28. நன்றாகக் கல்வி கற்க வேண்டும் என்ற ஆவல் எவ்வாறு தீபனுக்கு ஏற்பட்டது?

**VII. கட்டுரை வரைக.** **1 × 10 = 10**

29. "ஒற்றுமையே உயர்வு" என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

**VIII. பழமொழிகளை நிறைவு செய்க.** **5 × 1 = 5**

30. மீன் குஞ்சுக்கு ______________ பழக வேண்டுமா?

31. மண்ணுக்கு ______________ பாரமா?

32. கரைப்பார் கரைத்தால் ______________ கரையுமா?

33. நெருப்பையும் ______________ அரிக்குமா?

34. மலையைக் கிள்ளி ______________ பிடிக்கிறதா?